III.—CLARIFICATION *RE* PRICE OF RAW COTTON MENTIONED IN THE BUDGET SPEECH OF THE HON. THE FINANCE MINISTER.

MR. SPEAKER : The other day the hon. Member Sri P. S. Chinnadurai wanted some clarification from the Hon. the Finance Minister in regard to certain terms which he styled as inaccuracies in the Budget speech. The Hon. the Finance Minister was not then in town. I said I would consult him and allow him to make a reply to-day. Is the Hon. the Finance Minister ready?

THE HON. SRI C. SUBRAMANIAM : என்னுடைய பட்ஜெட் உரையிலே "பருத்தி இப்பொழுது மணங்கு 100 ரூபாய் அளவில் விலை போகிறது" என்று குறிப்பிட்டிருந்தேன். இது சரியல்ல என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ சின்னதுரை அவர்கள் சொன்னதாக அறிந்தேன். "பருத்தி" என்று குறிப்பிட்டதற்குப் பதிலாக "பஞ்சு" என்று குறிப்பிட்டிருக்கவேண்டும். இம்பீரியல் மணங்கு பிரகாரம் இந்த விலை சரியாக இருக்கும். இந்தத் தவறுக்கு வருந்துகிறேன்.

IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1957-58—(*cont.*)

(1) DEMAND II—EXCISE DEPARTMENT.

MR. SPEAKER : இன்று இரண்டு மான்ய கோரிக்கைகள் விவாதிக்கப்படும். முதல் இரண்டு மணி நேரத்தில் **Excise Demand** விவாதிக்கப்படும். கனம் அமைச்சரவர்களுக்கு எவ்வளவு அவகாசம் வேண்டுமென அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது, இந்த மான்யக் கோரிக்கையை பிரேரேபிக்கும்போது ஐந்து நிமிஷங்களுக்குக் குறைவாய் இருந்தால் போதும். பின்னர் பதிலளிக்கும்போது 25 நிமிஷங்கள் வேண்டும்.

MR. SPEAKER : ஆதலால், கனம் மந்திரி அவர்கள் 11-30 மணிக்கு பதில் அளிப்பார்கள். இது அங்கத்தினர்களுக்கு சம்மதம் என்று நினைக்கிறேன்.

* SRI M. SELVARAJ : On a point of information Sir, 1957-ம் ஜூலை 8-ம் தேதியில் விற்பனை வரி இலாகா மான்ய கோரிக்கைமீது நடந்த விவாதத்தின்போது நான் பேசிய சில கருத்துக்களை **Indian Express** பத்திரிகையில் தவறுதலாகப் போட்டு இருக்கிறார்கள். இது அங்கத்தினர்களுடைய உரிமையை பறிப்பதாக இருக்கிறது. ஆகையால் இதை **Privilege Committee**-யின் பரிசீலனைக்கு அனுப்பவேண்டுமாய் கோருகிறேன்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் சபை முன்பு ஏதாவது உரிமை பிரச்னையைக் கொண்டுவர விரும்பினால் முதலில் என்னை என்னுடைய அறையில் சந்தித்து அதைக் கொண்டுவர அனுமதி கோரவேண்டும். இது சம்பந்தமான அங்கத்தினருடைய பிரேரணையை நான் இதுவரை பார்க்கவில்லை. ஆகையால் என்னுடைய அறைக்கு வந்து பிரேரணை விஷயமாக பேசும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்குப் பிறகு பதில் சொல்லுகிறேன்.

SRI K. R. NALLASIVAM : On a point of order Sir, எல்லா வெட்டுப் பிரேரணைகளையும் பிரேரேபிக்க சபாநாயகர் அனுமதி கொடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். பழைய சபையிலும் கூட அங்கத்தினர்கள் கொடுத்த எல்லா வெட்டுப் பிரேரணைகளும் பிரேரேபிக்கப்பட்டன ; ஆனால் ஒன்றின் மீதுதான் பேசுவார்கள். இப்பொழுது எல்லா வெட்டுப் பிரேரணைகளையும் பிரேரேபிக்க அனுமதிப்பதில்லை. இது உண்மையிலேயே அங்கத்தினர்கள் தங்களுடைய தொகுதிகளைப்பற்றிய கருத்துக்களை எடுத்துக் கூறவே இவ்விதம் வெட்டுப் பிரேரணைகளைக் கொடுக்கிறார்கள். இவை